

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்பு பணிகளை வரைமுறை படுத்தும் பணியின் ஒரு பகுதியாக வேலூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் ஆலோசனைப்படி நேற்று முன்தினம் (14.10.2026) மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர,பகுதி மற்றும் பேரூர் ஆகிய கழக அமைப்புகளின் செயலாளர்களுடன் தலைமைக்கழக பிரதிநிதிகளான கழக துணை அமைப்புச்செயலாளர் ப.தாயகம்கவி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இ.கருணாநிதி ஆகியோர் கலந்தாய்வு மேற்கொண்டனர். உடன் வேலூர் மாநகர செயலாளர், ப.கார்த்திகேயன் மற்றும் ஒன்றிய,நகர,பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அணிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.

சகோதரியாக எப்போதும் உங்களுடன் இருக்கிறேன்!

சி.ஜே.பி. நிர்வாகிகள் கைதுக்கு மம்தா பானர்ஜி கண்டனம்!

கொல்கத்தா, அக்.16-

மேற்கு வங்கத்தின் முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி, சி.ஜே.பி. நிர்வாகிகள் கைது செய்யப்பட்ட சம்பவத்திற்குத் தனது கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்துள்ளார். மேலும், நாட்டின் கோடிக்கணக்கான இளைஞர்களை நோக்கி, "சகோதரியாக எப்போதும் உங்களுடன் இருக்கிறேன்" என்று அவர் உறுதியளித்துள்ளார்.

மம்தா பானர்ஜியின் எக்ஸ் தளப் பதிவு வருமாறு:இந்தக் கைது நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்து மம்தா பானர்ஜி தனது சமூக வலைதளப் பதிவில், ஜனநாயக உரிமைக்காக எங்களுடைய



முந்தைய தலைமுறையினரும் நாங்களும் கடுமையாகப் போராடியுள்ளோம்; அந்தப் போராட்டத்தை நாம் தொடர்ந்து செய்தாக வேண்டும். அசுதோஷ் ரன்கா மற்றும் சௌரவ் தாஸ் கைது செய்யப்பட்டுள்ளதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டிய தருணம் இது. இது ஒட்டுமொத்த தலைமுறையையும் அச்சுறுத்தி அமைதிப்படுத்தும் முயற்சியாகும். இதை எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. நமது அரசியலமைப்பு உரிமைகளை நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

நாட்டின் பல பகுதிகளில் இதுபோன்ற ஜனநாயகப் படுகொலைகள் தொடர்ந்து அரங்கேறி வருவதாக குறிப்பிட்ட அவர், மேற்கு வங்கத்தில் உள்ள 14,000 மக்கள் காவல்துறையினரின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

'மக்களின், மக்களால், மக்களுக்காக' என்ற ஜனநாயகக் கோட்பாட்டை மறந்து செயல்படும் அரசு, தனது இறுதிக்கட்டத்தை நெருங்கி வருவதாகவும் அவர் கடுமையாக விமர்சித்தார்.

இறுதியாக, நாட்டின் இளம் தலைமுறையினருக்குத் தைரியம் ஊட்டும் வகையில், "கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு நான் சொல்கிறேன்; உங்கள் சகோதரி உங்களுடன் இன்றும், என்றும், எப்போதும் இருக்கிறேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று நமது நாட்டைப் பாதுகாப்போம்" என்று மம்தா பானர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை. அக்-16

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சர், திருமயம் சட்டப்பேரவை உறுப்பினருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : - புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) திருமண மஹாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் வருகின்ற 19-10-2026 திங்கள்கிழமை காலை 10 மணியளவில்

கழக விவசாய அணி செயலாளரும், முன்னாள் தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மதுரை எஸ்.பாலா ஆகியோர்



தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்புரையிலும்,

முன்னாள் அமைச்சர் ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், கார்த்திக் தொண்டைமான், உதயம் சண்முகம், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, முன்னாள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் மாநில , மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய , நகர ,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மட்டும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

பொருள்: 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக மறுசீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு குறித்து,

கழக வளர்ச்சி பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு! மதுரை, கம்பம், ஸ்ரீவில்லிபுத்தூரில்

ஒரே நாளில் 3 பேர் வெட்டிக்கொலை!

3 பேர் படுகாயம்!

மதுரை, அக். 16 -

மதுரை, கம்பம், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரே நாளில் 3 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மதுரை மாவட்டம், விராதனூர் சத்யா நகர் பகுதியை சேர்ந்தவர்கள் சந்தோஷ்குமார் (24), தினேஷ் (20). இருவரும் நேற்று முன்தினம் நள்ளிரவில் அப்பகுதியில் டூவீலரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த கார் திடீரென டூவீலர் மீது மோதியது. இதில் இருவரும் நிலைதடுமாறி கீழே விழுந்தனர். காரில் இருந்து இறங்கிய கும்பல், இருவரையும் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பிச் சென்றது. இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்த சந்தோஷ்குமார் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். தினேஷ் படுகாய மடைந்தார்.

கம்பம்: தேனி மாவட்டம், கம்பம் அருகே உள்ள அண்ணாபுரம் பகுதியை சேர்ந்தவர் பிரபு (32). இங்குள்ள ஜவுளிக்கடையில் வேலை பார்த்து வந்தார். இவரது மனைவியும் அதே கடையில் வேலை பார்த்து வருகிறார். இருவரும் நேற்று முன்தினம் தினம் இரவு கம்பம் புறவழிச் சாலை பகுதியில் உள்ள திரையரங்கிற்கு டூவீலரில் சென்றனர். கம்பம் ஊத்துக்காடு பிரிவு அருகே, இவர்களின் டூவீலர் மீது எதிரே வந்த மற்றொரு டூவீலர் லேசாக உரசியது. அந்த டூவீலரில் கம்பம் கோம்பை ரோடு பகுதியை சார்ந்த ரஞ்சித் (21), கிரி (21), வருச நாடு பகுதியை சேர்ந்த முத்துப்பாண்டி (23) ஆகியோர் இருந்தனர். அவர்களிடம், 'ஒரே வாகனத்தில் மூன்று பேர் ஏன் இவ்வளவு வேகமாக வருகிறீர்கள்?' என்று கேட்டு பிரபு கண்டித்தார்.

பின்னர் மனைவியை திரையரங்கில் இறக்கி விட்ட அவர், டூவீலரை நிறுத்த பார்க்கிங் பகுதிக்கு சென்றார். அங்கு வந்த ரஞ்சித், கிரி, முத்துப்பாண்டி ஆகியோர் அவருடன் தகராறு செய்தனர். தகராறு முற்றிய நிலையில் திடீரென கத்தியை எடுத்து பிரபுவை சரமாரியாக தாக்கியதில் அவர் உயிரிழந்தார். கம்பம் வடக்கு போலீசார் வழக்குப்பதிந்து ரஞ்சித், கிரி ஆகியோரை கைது செய்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர்: விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள கூனம்பட்டியைச் சேர்ந்தவர் ஈஸ்வரன் (48). கூலி தொழிலாளி. இவரது மனைவி பாலகுரு (42). ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள சித்தாலம் புத்தூர் பகுதியை சேர்ந்தவர் தமிழழகன் (34). டிரைவர். இவருக்கு திருமணமாகி மனைவி இறந்து விட்டார்.

இவர் ஈஸ்வரனின் மகளுடன் பழகி வந்துள்ளார். இதனை ஈஸ்வரன் கண்டித்துள்ளார். இந்நிலையில் ஈஸ்வரனின் மகளை பெண் கேட்டு தமிழழகன் சமீபத்தில் வீட்டிற்கு வந்தார். அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இதனிடையே நேற்று முன்தினம் இரவு ஈஸ்வரனின் வீட்டிற்கு தமிழழகன் வந்தார். அப்போது ஈஸ்வரன் கண்டித்ததால் திரும்ப சென்றுவிட்டார். இதையடுத்து ஈஸ்வரனும், அவரது மனைவி பாலகுருவும் சித்தாலம்புத்தூரில் உள்ள தமிழழகனின் வீட்டிற்கு சென்றனர். அங்கு, நடந்த சம்பவங்களை அவரது தந்தையிடம் கூறி கண்டித்தனர்.

அப்போது ஈஸ்வரனுக்கும் தமிழழகனுக்கும் தகராறு ஏற்பட்டது. ஆத்திரமடைந்த ஈஸ்வரன், தான் கொண்டுவந்த அரிவாளால் தமிழழகனை வெட்டினார். அப்போது தமிழழகன் அந்த அரிவாளை பிடுங்கி பதிலுக்கு ஈஸ்வரனை சரமாரியாக வெட்டினார். இதில் ஈஸ்வரன் உயிரிழந்தார். தடுக்க முயன்ற ஈஸ்வரன் மனைவி பாலகுருவுக்கும் வெட்டு விழுந்தது. இது குறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

பாலியல் தொழில் போட்டி? வாலிபர் கொன்று புதைப்பு

காட்பாடி தாலுகா திருவலம் அடுத்த அம்முண்டியை சேர்ந்தவர் தேவராஜ் (35). இவர் வேலூர் காகிதப்பட்டறையில் உள்ள ஒரு தனியார் லாட்ஜில் ஊழியராக பணிபுரிந்து வந்தார். கடந்த 9ம் தேதி காலை வழக்கம் போல் வீட்டில் இருந்து பணிக்கு சென்றவர், வீடு திரும்பவில்லை. தேவராஜ் கடைசியாக சென்ற யாசினை (32) உட்பட 2 பேரை பிடித்து விசாரித்தில், தேவராஜை கழுத்தில் வெட்டி கொலை செய்து யாசின் வீட்டின் பின்புறம் புதைத்திருப்பது தெரியவந்தது.

முதற்கட்ட விசாரணையில், யாசின் சூதாட்ட கிளப் நடத்தி வந்ததும், பெண்களை வைத்து விபசாரம் செய்து வந்ததும் தெரியவந்தது. தேவராஜ் பணி செய்து வந்த தனியார் லாட்ஜிலும் விபசாரம் உட்பட சமூக விரோத செயல்கள் நடந்து வருவதும் தெரியவந்தது. இதனால் தொழில் போட்டியில் தேவராஜ் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.



சிவகங்கை மாவட்டம் சிவகங்கை நகர் மின் வாரிய கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம் முன் மின்வாரிய அனைத்து தொழிற் சங்கம் ஜே.ஏ.சி. சார்பில் மின்வாரியம் தனியார் மயம் உட்பட பல்வேறு மக்கள் விரோத த.வெ.க.அரசைக் கண்டித்து நடைபெற்ற கண்டண ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் முருகேசன் , உமாநாத் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

செஞ்சி அருகே 7 வயது சிறுமி மாயம்

4 நாட்கள் ஆகியும் துப்பு கிடைக்காததால் போலீசார் திணறல்!

விழுப்புரம் வடக்கு மாட்ட கழக செயலாளர், செஞ்சி மஸ்தான் அறிக்கை!

செஞ்சி அக் 16-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம்பூண்டியில் 7 வயது சிறுமி காணமல் போன வீட்டுக்கு, விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்ஒன்றியக் குழுத் தலைவர் விஜயகுமார் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் நேரில் சென்று பெற்றோரைச் சந்தித்து விவரங்களை கேட்டறிந்தார்.இதுகுறித்து முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சிமஸ்தான் தனது அறிக்கையில் கூறுகையில்

தொடர்ந்து, விசாரணை மேற்கொண்டு வரும் காவல்துறை அதிகாரிகளையும் சந்தித்து விசாரணை



யின் நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

சிறுமி காணாமல் போனது தொடர்பாக நான்கு நாட்களாக காவல் துறையினர் தேடியும் விசாரணை நடத்தியும், இது வரை எந்த முன்னேற்றமும் ஏற்படாதது வேதனையளிக்கிறது.

குழந்தையின் பெற்றோரும், கிராம மக்களும் மிகுந்த கவலையிலும் கொந்தளிப்பிலும் உள்ளனர்.

தமிழக முதல்வர் விஜய், 'நான் உங்கள் வீட்டுப் பிள்ளை, உங்கள் நண்பன், தாய் மாமன்' எனப் பேசி வருகிறார். ஆனால், காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வராக, காணாமல் போன சிறுமியை மீட்பதில் உரிய கவனம் செலுத்தவில்லை.

திரைப்படங்களில் மூன்று மணி நேரத்தில் குற்றவாளிகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பது போன்ற காட்சிகளில் நடித்தது சாதனையல்ல.

நிஜ வாழ்க்கையில் ஒரு குழந்தை காணாமல் போயிருக்கும்போது, அதை மீட்டுப் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை தமிழக முதல்வராக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல்துறையால் சிறுமியைக் கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டால், இனியும் காலதாமதம் செய்யாமல் வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும். பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக, இந்த விவகாரத்தில் தொடர்ந்து அமைதியாக இருக்க முடியாது.

சிறுமியைப் பாதுகாப்பாக மீட்கவும், அவரது பெற்றோரின் கவலையைப் போக்கவும் தமிழக அரசும் காவல்துறையும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்என இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ரயில்களில் அதிக சத்தத்துடன்

செல்போன் பயன்படுத்தினால் அபராதம், சிறை தண்டனை!

தெற்கு ரயில்வே எச்சரிக்கை!

சென்னை, அக்.16-

ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் ஹெட் போன் இல்லாமல் செல்போனில் அதிக சத்தத்துடன் இசை கேட்பது, வீடியோக்கள் அல்லது ரீல்ஸ் பார்ப்பது மற்றும் கேம்கள் விளையாடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டால் அபராதம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கப்படும் என தெற்கு ரயில்வே எச்சரித்துள்ளது.

ரயில்களில் பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுப்பதையும், சக பயணிகளுக்கு தொந்தரவு இல்லாத பயணத்தை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு தெற்கு ரயில்வே இந்த முக்கிய உத்தரவை வெளியிட்டுள்ளது.

செல்போனை அதிக சத்தத்துடன் பயன்படுத்துவதால் இடையூறுகள் ஏற்படுவதாக பல பயணிகள் புகார் அளித்துள்ளனர்.

ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் சில பயணிகள் அதிக சத்தத்துடன் செல்போனில் இசை கேட்பது, வீடியோக்கள் மற்றும் ரீல்ஸ் பார்ப்பது அல்லது கேம்களை விளையாடுவது போன்றவற்றில் ஈடுபட்டு மற்றவர்களுக்கு இடையூறு விளைவிப்பதாக தெற்கு ரயில்வே பயணிகள் ஆலோசனைக் குழுவினர் தெரிவித்தனர்.

இதனை அடுத்து, ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் அதிக சத்தத்துடன் இசை கேட்பது, வீடியோக்கள் அல்லது ரீல்ஸ் பார்ப்பது மற்றும் கேம்கள் விளையாடுவது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் என பயணிகளை தெற்கு ரயில்வே எச்சரித்துள்ளது.

திருத்தப்பட்ட ரயில்வே சட்டத்தின்படி, விதிமீறலில் ஈடுபடுபவர்களுக்கு 1,000 ரூபாய் அபராதம் அல்லது ஆறு மாதங்கள் வரை சிறைத் தண்டனை அல்லது இவை இரண்டும் விதிக்கப்படலாம். மேலும், எச்சரிக்கைகளை மீறித் தொடர்ந்து இடையூறு விளைவிக்கும் பயணிகளுக்கு 5,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

இது தொடர்பாக அனைத்து ரயில்வே கோட்டங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அபராதத் தொகையை வசூலிக்க டிக்கெட் பரிசோதகர்கள் மற்றும் மூத்த வணிகப் பிரிவு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

செல்போனில் இசை கேட்கும்போதோ அல்லது வீடியோக்களைப் பார்க்கும்போதோ ஹெட் போன்களைப் பயன்படுத்தவும், தொலைபேசி அழைப்புகளில் பேசும் போது மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பேசவும் பயணிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில் நடைபெற்ற பல கோடி மதிப்பிலான மக்கள் நலத் திட்டங்களை கடைக்கோடி மக்களிடம் எடுத்துச் சென்று சேர்க்கும் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி கிராமப்புற சுகாதாரம், ஆரம்பப் பள்ளிகள், அங்கன்வாடிகள், குடிநீர்,சாலைகள், மின் விளக்குகள், பாலங்கள்,கழிவுநீர் வாய்க்கால்கள் என பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளையும், தேவைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றி நிர்வாகத்தை சிறப்பாக கையாண்டு வியத்தகு சாதனைகள் புரிந்த திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் என அனைவருக்கும் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும்,அன்பையும் தெரிவித்தார்.